# மட்டக்களப்பின் முதல் மேயர் யார்? இன்று தெரியும்

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் இலாகா எண் : 49
போன் 589

National Tamil Daily

மலர் 9
இதழ் 149
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 26 ரபி ஆகி. 1 திங்கட்கிழமை [10-7-67]

மட்டக்களப்பு, திங். இன்று காலை நடைபெறும் மட்டக்களப்பின் முதலாவது மேயர் தேர்தலில், மட்டக்களப்பு எம்.பி. திரு. எஸ். இராசதுரை முன்னாள் நகரசபை தலைவர் திரு. திஸவீரசிங்கம், முன்னாள் உப-தலைவர் திரு. கதிரவேலு ஆகியோர்போட்டியிடுவார்கள்.

திரு. கே. சி. தம்பிநாயகம் தலைமையில் நடைபெறும் மேயர் தேர்தலைத் தொடர்ந்து துணை மேயரும் தெரிவு செய்யப்படுவார்.

மேயர் தேர்தலில் போட்டியிடும் மூவரும் தங்களுக்கு ஆதரவு திரட்டுவதில் மும்முரமாக ஈடு பட்டு வருகின்றனர்.

மேயர் தேர்தலின் போது அங்கத்தவர்கள் சில சமயம் கடத்தப்படுவார்கள் என்ற பேச்சு இங்குள்ள எல்லாவட்டாரங்களிலும் பரவியுள்ளது.

நேற்று முன்தினம் ஓர் அங்கத்தவர் திடீரென மறைந்ததால், மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அங்கத்தவர் நேற்றுக் காலை மீண்டும் மக்கள் மத்தியில் தென்பட்டதை தொடர்ந்து பரபரப்பு நீங்கியுள்ளது.

# சிம்மாசனப்பிரசங்கத்துக்கு திருத்தப் பிரேரணைகள்

தர்மராஜாமரணம்

## சந்தேகநபர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், திங்கள் ரயிலில் மரணமான தர்மராஜா சம்பந்தமாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவரான சிவஞானம் என்பவர் நேற்றுக்காலை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட சிவஞானம் உடனடியாக வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

தற்பொழுது கைதுசெய்யப்பட்டுள்ள சிவஞானம் மற்ரொரு சந்தேகநபரான சிவபாதத்தின் சகோதரர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபரான சிவஞானம் புகையிரத இலாகாவில் கடமையாற்றி தற்பொழுது ஓய்வுபெற்றுள்ளதாகவும், தெரியவந்துள்ளது. இவருக்கும் மரணமான தர்மராஜாவிற்குமிடையில் நெருங்கியதொடர்பு இருக்கலாமெனப்பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவபாதம் என்பவரையும், அவருடன் வசித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்ட மரணமான தர்மராஜாவின் மனைவியெனக்கூறப்படும்தங்கம்மாவையும் கண்டுபிடிக்க சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. [ந. நி.]

## அட்வகேட் - அதிபர் சண்டை சமாசமானது

யாழ்ப்பாணம், திங்கள் சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞரும் பாடசாலை அதிபரும் சம்பந்தப்பட்ட ஒரு தாக்குதல் வழக்கு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் திரு. எம். ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் வழக்கைச் சமாதானமாகத் தீர்த்துவைக்க எதிரி சார்பில் விரும்புவதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து வழக்குச் சமாதானமாகத் தீர்த்துவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் கொக்குவில் நாமகள் வித்தியாசாலை அதிபரான கனகரத்தினம் என்பவரைத் தாக்கியதாக திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞருமான முத்துக்குமாரு அம்பலவாணர் என்பவர் மீது கோப்பாய் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், அட்வகேட் எம். எஸ். சுந்தரலிங்கத்தின் உதவியுடனும், புரக்டர் கோபாலசாமியின் அனுசரணையுடனும் ஆஜராகியிருந்தார். வழக்காளி தரப்பில் புரக்டர் எஸ். சி. கதிரவேலு ஆஜராகியிருந்தார். [ந. நி]

## தமிழகத்தில் தொழில் நிலை

### அண்ணா அறிவிப்பு

சென்னை, ஜூலை 9

தொழில்நிலை பற்றித் தமது அரசாங்கம் பரிசிலனை செய்து, சட்டமியற்ற முன், தொழில் அதிபர்களுடன் கலந்தாலோசிக்கப் போவதாகத் தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை நேற்று சென்னையில் கூறினார்.

உற்பத்திக்குத் தடையாயிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்கத் தமது அரசாங்கம் முயலுமென்றும், உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவி செய்யும் கட்டுப்பாடுகளை அரசாங்கம் [illegible] மென்றும் அவர் [illegible] குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்க்காங்கிரசும் கொண்டுவர யோசனை

கொழும்பு, ஞாயிறு சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்குத் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசாங்கக் கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளும் கூட ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது. சிம்மாசனப் பிரசங்கத்தில் ''மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கும் பணிப்புரைக்கும் அமைவாகக் கடமையாற்றும் மாவட்டசபைகளை நிறுவ சட்டவாக்கம் கொண்டு வரப்படும்'' என்று கூறப்பட்டிருப்பதனால் சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு ஒரு திருத்தம் கொண்டுவருவதுபற்றி தமிழ்க்காங்கிரஸ் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது.

எதிர்க்கட்சியினர் கூட்டாகவும் தனித்தனியாகவும் சில திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்வது சம்பந்தமாக கூட்டாக ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## சீனாவில் போர் வீரர் தற்கொலை

பீகிங், ஜூலை 9

இஞ்சு என்னுமிடத்தில் எல்லைப் போர் வீரர் 17 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

மா எதிர்ப்பாளர்களான இவர்கள், தமது தோழர் சிலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, தமக்கும் அக்கதி ஏற்படுமா என்ற பீதியில் தற்கொலை செய்து கொண்டனராம்.

நவசீனச் செய்தி ஸ்தாபனம் இச்செய்தியை அறிவித்துள்ளது.

## பிரயாணிகள் சங்கமும் வரவேற்கும்

பண்டத்தரிப்பு, ஞாயிறு எதிர்வரும் 13-ம் திகதி இளவாலைக்குவிஜயம்செய்யவிருக்கும் திருகோணமலை துணை ஆயருக்கு சண்டிருப்பாய்—கீரிமலை பஸ் பிரயாணிகள் சங்கத்தினரும் வரவேற்பளிக்க ஏற்பாடுசெய்து வருகின்றனர். துணை ஆயர் வந்தனைக்குரிய பி. தியோகுப்பிள்ளை பிரஸ்தாப சங்கத்தின் தலைவராகப் பல [illegible] புதிய சேவையொன்றையும் ஆரம்பித்துவைத்தார்.

## கந்தரோடையில் பிக்குகள் சமாதி

### 12-ம் நூற்றுண்டில் இருந்ததாம்

### பரணவிதான கூறுகிறார்

யாழ்ப்பாணம், திங்கள் கிறிஸ்துகாலம்தொடங்கி கிறிஸ்துவிற்குப்பின் 12-ம் நூற்றுண்டுக் காலம் வரை கந்தரோடை பிரபலம் வாய்ந்த புத்தபிக்குகளின் புனித சமாதிகளைக்கொண்ட பகுதியாக இருந்திருக்கலாமென முன்னாள் புதைபொருளாராய்ச்சி கமிஷனர் பேராசிரியர் எஸ். பரணவித்தான தெரிவித்தார்.

புதைபொருளாராய்ச்சி கமிஷனர் டாக்டர் கொடகம்பர; பேராசிரியர் எஸ். பரணவித்தான ஆகியோர் பிராந்திய பொறுப்பாளர் திரு. உடுவரை, மாவட்ட பொறுப்பாளர் திரு. ஏ. கந்தையா ஆகியோருடன் கந்தரோடைக்கும் யாழ்ப்பாணம் நூதனசாலைக்கும் சென்று பார்வையிட்டனர்.

கடந்த ஒரு வருட காலமாக கந்தரோடையில் ஆராய்ச்சி செய்யப்பட்டுவரும் பொருட்களைப் பற்றி கந்தரோடை நிலைய பொறுப்பாளர் திரு. செல்வரத்தினத்துடன் ஆராய்ந்தனர்.

அங்கு கண்டெடுக்கப்பட்ட அசோக சக்கரம் பதிக்கப்பட்டு முதிரைக் கல்லினால் செதுக்கப்பட்ட புத்தரின் பாத அடிச் சுவடுகளையும், புராதன மணிகளையும், பழைய நாணயங்களையும், பார்வையிட்டனர்.

ஸ்தூபிகளின் அத்திபாரங்கள், அளவிலும், நிறையிலும், இடைவெளியிலும் வித்தியாமாக இருப்பதையும் அவர்கள் கவனித்தனர்.

அங்கு கண்டெடுக்கப்பட்ட மணிகளைப் பற்றி கேட்டபோது 'மிக மிக பழைய காலத்து மணிகள் என்றும், நாணயங்களைப் பற்றி கேட்டபோது, கிறிஸ்து காலத்துக்கு முன்பு பாவிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் என்றும், 4-ம் நூற்றுண்டில் ஆண்ட மகாசேனன்காலத்து நாணயங்களென்றும், புதைபொருளாராய்ச்சி கமிஷனர் தெரிவித்தார்.

கந்தரோடையில் பழைய குடியளை இருக்கலாமெனக் கருதி சில இடங்களை ஆராய்ந்தபோது, பழைய காலத்து ஓடுகளும், செங்கட்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

மழைகாலங்களில், கந்தரோடை முழு கிராமங்களிலும், விலையுயர்ந்த மணிகள் கண்டெடுக்கப்பட்டு விற்கப்படுவதாக உத்தியோகத்தர்கள் கமிஷனரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

1917-ம் ஆண்டு சேர் போலி பீரிஸால், கந்தரோடையில கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலைகளையும், ஸ்தூபிகளையும், தற்பொழுது கண்டெடுக்கப்பட்ட பொருட்களையும் நூதனசாலையில் பார்வையிட்டனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இன்றை உலகில்சிறிய நாடுகளுக்கு இடமில்லை என்பதையுத்தம் தெளிவாக்கிவிட்டது. சிறிய நாடுகள் தனியாக வாழ முடியாது. அவைகளின் கூட்டமைப்பு வேண்டுமானால் நிலைபெற முடியும்.

— ஜவஹர்லால்நேரு

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389

...பராபவம் பிலவங்கஞு
ஆனி மீ 26உ (10 7-67)

# கைத்தொழில் வளர்ச்சி

தனியார் துறையில் கைத்தொழில்களை ஊக்குவிக்கவும் வளர்க்கவும் அரசாங்கம் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு கைத்தொழில் வளர்ச்சி அவசியம். கைத்தொழில்துறையில் இலங்கை அதிக முன்னேற்றமடைந்துள்ளதென்று சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இலங்கையுடனும் அதன் பின்னரும் விடுதலையடைந்த நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடுகையில் கைத்தொழிலில் இலங்கை பெரிய அளவில் முன்னேறவில்லையென்று சொல்லலாம். ஆனல் சென்ற சில வருடங்களில் கைத்தொழிலில் ஓரளவு அபிவிருத்தி காணப்பட்டுள்ளது. அரசாங்கத் துறையில் மட்டும் கைத்தொழில் வளர்ச்சியடைய முடியாது. தனியார் துறையிலும் கைத்தொழில் வளர்ச்சிபெற ஊக்கமளிக்கப்பட வேண்டும். இந்த வகையில் தனியார் துறையில் கைத்தொழில்களை ஊக்குவிக்கவும், வளர்க்கவும், விருத்தி செய்யவும் புதிய சட்டம் கொண்டுவரப்படுமென அரசாங்கம் அறிவித்திருப்பது நம்பிக்கையளிப்பதாகும். இந்தச் சட்ட அமைப்புக்குட்பட்டுகைத்தொழில் வளர்ச்சித் துறையில் இன்னும் அதிக பொறுப்புக்களை ஏற்கக் கூடியவாறுகைத்தொழில் அபிவிருத்திச்சபை புனரமைக்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

கைத்தொழிலை ஊக்குவிக்கவும் வளர்க்கவும் புதிய சட்டம் கொண்டு வந்தால் மட்டும் போதுமா? இப்பொழுது கூட புதியபுதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு தனிப்பட்ட பலர் தயாராக இருக்கின்றனர். இதற்கு முன்னரும் இதில் முயற்சிசெய்து அவர்களுக்கு ஏற்பட்ட வீஞன இடையூறுகள் காரணமாக அந்த முயற்சிகளை கைவிட்டனர். புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு செலாவணிக் கஷ்டத்தைக் காரணம் காட்டி ஊக்கத்துக்கு இடையூறு செய்யப்படுகிறது. அரசாங்க அதிகாரிகள்சிலரின் கெடுபிடிகளும் கைத்தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கின்றன. உள்நாட்டில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைப் பயன்படுத்தி புதிய புதிய பொருள்களை உற்பத்திசெய்வதற்கு சட்டத்தை மட்டும் கொண்டுவந்தால் போதாது; அரசாங்க சேவையிலுள்ள சிறிய ஊழியர் முதல் பெரிய அதிகாரிகள்வரை சுறுசுறுப்பும் நாட்டின் அபிவிருத்தியில் அக்கறையுமுடையவர்களாக இருக்க வேண்டும்.

தொழிற் தகராறுகள் தாமதமின்றி விரைவாகத் தீர்க்கப்படுவதற்கானவழிவகைகளைச்செய்வதும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனவு செய்வதற்கான வசதியும் உற்பத்திப் பொருள்களின் தரம் பற்றிக் கண்காணிப்பதற்கான ஒழுங்குகளும் கைத்தொழில் வளர்ச்சியடைவதற்கு முக்கிய தேவைகளாகும்.

## மக்கள் மன்றம் சிரமதானம்

கரவெட்டி, ஞாயிறு

கரவெட்டி கிழக்கிலுள்ள தளவிலில் சிரமதான மூலம் பொதுக் கிணறு ஒன்று சுத்தம் செய்யப்பட்டது. இதற்கான ஒழுங்குகளை கரவெட்டி கிழக்கு மக்கள் மன்றம் மேற்கொண்டது. மக்கள் மன்றத் தலைவர் திரு. சின்னத்துரை தியாகராஜா தலைமையில் நடந்த இச் சிரமதானத்தில் ஐம்பது தொண்டர்கள் பங்கு பற்றி உழைத்தனர். அரசியற் கலப்பற்ற இச் சங்கம் கரவெட்டி கிழக்கு மருதடி ஒழுங்கை உட்பட வேறுபல பொது வேலைகளிலும் சிரமதானப் பணியிலீடுபடுமெனத் தலைவர் கூறினர்.

## மேலும் ஐவருக்கு அதிபர் பதவி

புன்னலைக்கட்டுவன், ஞாயிறு

அண்மையில் நடைபெற்ற முதல்தர அதிபர் தெரிவில் அதிருப்தியுற்ற சில ஆசிரி தொழிற்சங்க வாதிகள் சில தமிழ் எம். பி. க்களுக்குச் சமர்ப்பித்த மகஜர் காரணமாக மேலும் ஐந்து தமிழர் முதல் தர அதிபர் பதவி பெறக் கூடுமெனத் தெரிகிறது. இம் முயற்சியில் எம். பி.க்களான திருவாளர்கள் ஜி ஜி. பொன்னம்பலம், வி. என். நவரத்தினம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

## தொழிற் சங்க விசேஷ கூட்டம்

மல்லாவி, ஞாயிறு

வட மாகாணக் காணி அபிருத்திக் கண்காணிப் பாளரின் தொழிற் சங்க விசேஷ பொதுக் கூட்டம் அகில இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் திரு. ஏ. எம். எஸ். பண்டாவின் தலைமையில் இம் மாத நடுப் பகுதியில் யாழ். அரசாங்க செயலக ஆலோசனை மண்டபத்தில் நடை பெறுமென்றும் தொழிற் சங்க சம்மேளனத்தின் செயலாளர், தனுதிகாரி ஆகியோரும் இதில் கலந்து கொள்வரெனவும் இக் கூட்டத்தில் காணி அபிவிருத்திக் கண்காணிப்பாளர்களின் குறைபாடுகளும் மற்றும் பல பிரச்னைகளும் ஆராயப் படுமென்றும் தெரிய வருகிறது.

## பீஹாரில் மழை

பீஹார், ஜூலை 9

பீஹாரில் நேற்றுப் பல இடங்களில் நல்ல மழை பெய்திருக்கிறது. பல மாதங்களாக நிலவிய வரட்சியை இம் மழை ஓரளவு முறிலதுள்ளது. ராஜ்யத்தின் பல பாகங்களிலும் விதைப்பு ஆரம்பமாகிவிட்டது.

## "அ. இ. தமிழ்தலைமை ஆசிரியர்சங்க தீர்மானங்களை செயல்படுத்த முயற்சி செய்க"

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைத் தமிழ்த் தலைமை ஆசிரியர் சங்கத் தூதுகோஷ்டியொன்று யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை நேற்று முன்தினம் சந்தித்து தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் பற்றி தெரிவித்தது.

கடந்த ஜூன்மாதம் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்கு முயற்சிசெய்யுமாறு அக்கோஷ்டி கேட்டுக்கொண்டது.

ஆசிரியர் பிரச்னை சம்பந்தமாகக் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியைப் பேட்டிகாண ஒழுங்குசெய்து தருமாறும், கல்வி மந்திரியிடம் தங்கள் பிரச்னைகளைக் கூறுமாறும் அக்கோஷ்டி யாழ்ப்பாணம் எம். பி.யிடம் தெரிவித்தது.

தமிழ்த் தலைமை ஆசிரியர்கள் பிரச்னை பற்றி கல்வி மந்திரியுடன் பேசுவதாகவும், நிரந்தரக் காரியதரிசியைப் பேட்டிகாண ஏற்பாடு செய்வதாகவும் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொன் வினைஞர் சங்கத்தினர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைச் சந்தித்து இலங்கை முழுவதும் உள்ள பொன் வினைஞர்களும், பதிவுசெய்யப்பட்ட சங்கங்களில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. [நி]

## வைத்திய நிலையம்

### யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

கோண்டாவிலிலுள்ள புதிய மத்திய பஸ் டிப்போவில் பஸ் ஊழியர்களுக்கான ஒரு சிகிச்சை நிலையம நிறுவப்படவிருக்கிறது. அந்நிலையத்தில் ஒருடாக்டர் கடமையாற்றுவார்.

தென் இலங்கையிலுள்ள முக்கிய பஸ் டிப்போக்களில் உள்ளதுபோல், இங்கும் ஒரு வைத்திய நிலையம் நிறுவப்பட வேண்டுமென யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து சிகிச்சை நிலையம் நிறுவப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

பஸ், ஊழியர்களுக்கெனத் தனியாக ஒரு சிகிச்சை நிலையம் இல்லாததால் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் பெறுவதற்கு, பஸ் ஊழியர்கள் பெரும் சிரமப்படுவதாகச் சுட்டிக்காட்டியதை தொடர்ந்தே நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வைத்திய நிலையம், இம்மாத இறுதியில் நிறுவப்படுமெனவும் இதற்கான கட்டிடம் அங்குதெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## "நின்று இனிக்கும் தேன்"

வெள்ளவத்தை, ஞாயிறு

"இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளையும் உள்ளடக்கிய தமிழ்மொழியின் பண்டைய இலக்கிய வளமும் வரலாறும் சிறப்பு வாய்ந்தவை. தேன் தமிழ் என்று எமது மொழியை ஒப்பிட்ட புலவர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். சர்க்கரை வாயில் போட்டதும் இனிக்கிறது. கற்கண்டு தொண்டைக்குள் போகும் வரையில் இனிக்கிறது, ஆனல் தேனே அடித்தொண்டைக்குள் சென்றுலும் தெவிட்டாமல் நின்று இனிக்கிறது. தமிழும் அத்தகைய மாருத இனிப்புடையது" இவ்வாறு கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: முற்காலத்தில் பாடல் வன்மைமிக்க புலவர்கள் அநேகர் இருந்தார்கள். பக்கத்து வீட்டுக்காரனிடம் பாக்குவெட்டியை வாங்கிக்கொண்டு வா என்றாலும் புலவர் அக்கூற்றை அருமையான பாடல்களின் மூலமே கூறுவாராம். பண்டைத் தமிழர்கள் எந்த விடயத்தையும் நுண்ணிய இலக்கிய ரசனையுணர்வோடு கண்டறிந்தார்கள். எனவே தான் பண்டைத் தமிழ் இலக்கியங்களின் [illegible] உணர்வு இன்றும் அழியாமல் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில்

## துணைஆயருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள்

திருக்கோணமலைத் துணை ஆயர் திரு பி. தியோகுப்பிள்ளைக்கு இம்மாதம் 13ம் திகதி யாழ். மேற்கு கத்தோலிக்க ஆசிரியர்கள் வரவேற்பொன்று அளிக்கவுள்ளார்கள். யாழ்நகர மண்டபத்தில் அன்றுமாலை 5மணிக்கு நடைபெறும் இவ்வைபத்தில் திரு. தியோகுப்பிள்ளைக்கு பொற்கிளியொன்றும் வழங்கப்படவிருக்கிறது.

வடமாநிலக்கல்வி ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு, நல்லூர் ஆசிரியப்பயிற்சி கல்லூரி அதிபர் திரு. அரசரத்தினம் ஆகியோர் உட்படப்பலர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

## அபாய நிலையில் பிரமபுத்திரா

புதுடில்லி, ஜூலை 9

பிரமபுத்திரா ஆறு, வெள்ளத்தின் விளைவாக அபாய நிலையிலிருந்து ஓர் அடி உயர்ந்துள்ளது.

## நாட்டிலும நகரிலும்

பக்திப்பாடல்களை சினிமா மெட்டுக்களில் பாடுவது நன்றுயில்லை என்று ஒரு பிரமுகர் சென்ற வாரம் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் சொன்னுர். சென்ற வாரத்தில் தான் பித்துக்குளி முருகதாஸ் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் தமதுபக்திப் பாடல்களை பாடிக்கொண்டிருந்தார். முருகதாஸரின் பாட்டுகள் அச்சோட்டாக சினிமா மெட்டுக்களில் இல்லாவிட்டாலும் ஏறக்குறைய அவற்றின் சாயலில் உள்ளவை. ஆகையால் ஸ்ரீமுருகதாஸரையே மேற்படி பிரமுகர் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று பலர் நம்புகிறுர்கள்.

அவர் குறிப்பிட்டு பேசியது முருகதாஸ் அவர்களையோ அல்லது வேறு ஆட்களையோ நான் அறியேன். எப்படியிருப்பினும் இந்த சமயத்தில், அதாவது ஒரு வேற்று நாட்டவர் நமது மத்தியில் இருக்கும்போது அந்த அபிப்பிராயம் வெளியிடப்பட்டது சற்றே விரஸமாய் எனக்குப் படுகிறது.

பக்திப்பாடல்களின் நோக்கம் பக்தியைத் தட்டி எழுப்பி பாடுபவரையும் கேட்பவரையும் பக்தி பரவஸத்தில் மூழ்கடிப்பதே என்று வைத்துக்கொண்டால் அவை எப்படிப் பாடப்படவேண்டுமென்று ஒரு பிரச்னை எழுகிறது.

சிலருக்கு சிறு வயதிலிருந்தே கோயில் குளங்களில் தேவார. திருவாசகங்கள் பாடப்பட்டு வந்த முறையே பக்தி ஊட்டுவதாயிருக்கும். எமது கோயில்களில் சரியான பண் முறையில்தான் எல்லோரும் பாடுகிறுர்கள் என்று சொல்வதற்கில்லை. ஒவ்வொருவரும் தாம் தாம் நினைத்த பிரகாரம் பாடுவார்கள். 'பித்தா பிறை சூடி'யை சிலர் நாதநாமக்கிரியை ராகத்திலும் சிலர் சுருட்டி ராகத்திலும் பாடுவார்கள் இதில் எது பக்தியை எழுப்புகிறதென்பது பிரச்னை.

உண்மை என்னவென்றுல் உண்மையானபக்திமானுக்கு நாதநாமக்கிரியை. சுருட்டி என்ற வேற்றுமை கிடையாது. அவருக்கு அந்த தேவாரத்தின் வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தே, அது எப்படித்தான் அபஸ்வரமாகவும் அவலயமாகவும் பாடப்பட்டாலும், பக்திப் பிரவாகம்எழுந்துவிடுகிறது. அவருக்கு இசையில் துப்புரவாக கவலையில்லை. வார்த்தைகளும் தேவாரத்தில் பொதிந்து கிடக்கும் அர்த்தமுமே போதும் பக்தியை உண்டாக்கும்.

வேறு சிலருக்கு பக்தியை உண்டு பண்ண இசையின் உதவியைநாடவேண்டியிருக்கிறது. பக்தி என்பது ஒருவித உணர்ச்சி, இந்த உணர்ச்சியை தூண்டுவதற்கு சில ராகங்கள் அல்லது இசைக்கோலங்களால் முடியும். பொருத்தமான இராகங்களுடன் தக்க அர்த்தபுஷ்டியும் கூடிய பாடல்களைப் பாடும்போது எந்த கடின நெஞ்சத்திலும் நெகிழ்வு உண்டாகும்.

வைகறையில் பூபாள ராகமும் மத்தியானத்தில் மணிரங்கு ராகமும் இரவில் மோஹனமும் எவருடைய மனத்திலும் ஒருவித எழுச்சியை உண்டுபண்ணும். இக்காலங்களில் தேவாலயங்களில் நின்று பக்திப் பாடல்களை மேற்சொன்ன ராகங்களில்பாடினுல் பக்தியுணர்ச்சி வெளிவர தவறமாட்டாது.

ரேடியோவில் வெள்ளிக்கிழமைதோறும் நடைபெறும் பக்திப் பாடல்களுக்கு பக்கவாத்தியங்கள் இருக்கப்படாதென்றும், அவை இருந்தால் பக்தி பிறவாதென்

[4-ம்கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

றும் சிலர் ஒருகாலத்தில் கூறினுர்கள். இந்த விவாதத்திலுள்ள அர்த்தம்என்னவென்றுல் பக்கவாத்தியம் முதலிய பகட்டுகளுடன் தேவார திருவாசகங்களைப் பாடினுல் அதைக் கேட்பவர்கள் இசையில் மனத்தை பறிகொடுத்துவிட்டுப் பொருளை மறந்துவிடக் கூடும் என்பதாகும்.

பண் [இசை]களுக்கும் பக்திக்கும் நிறைந்த தொடர்பு இருக்கிறதென்பதை மறுக்க முடியாது. 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்றுர் ஞானசம்பந்தர். 'ஓசை ஒலி எல்லாம் ஆனய் நீயே' என்று இசையுடன் இறைவனையே தொடுக்கிறுர் அப்பர் சுவாமிகள்.

'ஞானப் பழத்தைப் பிழிந்து' என்று சுந்தராம்பாள் கணீரென்று காம்போதியில் பாடும் போது கேட்போர் உள்ளம் கனிந்துருகுவது எதனுல்? அந்த வார்த்தைகளுக்காகவா அல்லது அதிலுள்ள பண் சுவையினுலா?

பக்தியை எழுப்புவதில் பண்ணுக்கு, இசைக்கு எவ்வளவோ சக்தி இருக்கிறது என்பது மறக்க முடியாத உண்மை.

அந்த இசைஎப்படிப்பட்டதாயிருக்கவேண்டும்? பொது மக்களின் மனதைத்தொடக்கூடிய தாயிருக்கவேண்டும். அதற்கான நியதிகள், சட்டங்கள் என்ன?

இது ஒருவரால் தீர்ப்புக் கூறமுடியாத விஷயம்.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியாவில் மீண்டும் போர் நிலைமை

## ஐ. அ. கு.-இஸ்ரேல் துருப்புகள் மோதல்

### ஐ. நா. பந்தோபஸ்து சபை புதிய நெருக்கடி மீது விவாதம்

நியுயோர்க், ஜுலை 9

**மேற்கு ஆசியாவில் இஸ்ரேல் துருப்புகளுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுத்துருப்புகளுக்குமிடையே மீண்டும் ஏற்பட்டுள்ள போர் நிலைமையை விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்துசபை நேற்று அவசரமாகக் கூடியது.**

இந்தியப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதியின் வேண்டுகோளின் பேரில், மேற்கு ஆசிய விவகாமுரம் சபையின் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

மேற்கு ஆசியாவில் நடைபெற்றிருக்கும் மிகச் சமீபத்திய நிகழ்ச்சிகள் பற்றித் தமது வட்டாரங்களிலிருந்து எவ்வித தகவலும் கொடுக்க முடியவில்லை என ஐ. நா. பொதுக்காரியதரிசி யு தாண்ட் பந்தோபஸ்து சபைக்குத் தெரிவித்துள்ளார்.

**பார்வையாளர் இல்லை**

இஸ்ரேல், ஐ. அ. குடியரசுத் துருப்புகள் நிலைகொண்டுள்ள பகுதிகளில் ஐ. நா. பார்வையாளர்கள் இல்லையென்றும், பார்வையாளர்களை அங்கு நிறுத்தத் தாம் இரு நாடுகளிடமும் கோரியதாகவும், ஆனால் இதுவரை அவற்றிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லையென்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் விமானங்கள் ஐ. அ. குடியரசுத் துருப்புகள் மீது குண்டுவீச்சு நடாத்தி, போர் ஓய்வை மீறியதாக ஐ. அ. கு. குற்றஞ்சாட்டியுள்ளது.

**40 இஸ்ரேலியர் இறந்தனர்**

இதை மறுத்துள்ள இஸ்ரேல், ஐ. அ. கு. துருப்புகளே தமது துருப்புகள்மீது தாக்குதல் நடத்தியதாகவும், புதிய போர் நடவடிக்கைகளில் 40க்குமதிகமான இஸ்ரேலியத் துருப்புகள் கொல்லப்பட்டதாகவும் அறிவித்துள்ளது.

**ஐ அ கு. அறிவிப்பு**

இஸ்ரேல் துருப்புகள் சூயஸ் கால்வாயின் வடக்குப் பகுதியில் முன்னேறி வந்ததாகவும், நேற்று முழுவதும் சண்டை நிகழ்ந்ததாகவும், 3 இஸ்ரேலிய டாங்கிகளையும் 11 கவச வண்டிகளையும் ஐ. அ. கு. துருப்புகள் நாசமாக்கியதாகவும் ஐ. அ. கு. பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் விமானங்கள் செயித் துறைமுகத்தில் நடாத்திய குண்டுவீச்சின் விளைவாக ஒரு சாதாரண பிரஜை கொல்லப்பட்டதாகவும், மற்றும் 11 பேர் காயமடைந்ததாகவும் அவர் மேலும் அறிவித்தார்.

**இஸ்ரேல் குற்றச்சாட்டு**

ஐ. அ. கு. துருப்புகள் தான் முதலில் இஸ்ரேலிய துருப்புக்கள் மீது சுட்டதாகவும், அதன் விளைவாக 6 இஸ்ரேல் வீரர் கொல்லப்பட்டதாகவும் 30-க்குமதிகமானோர் காயப்படுத்தப்பட்டதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது.

## கொஸிஜினுக்கு இந்திரா செய்தி

### திரு. சி. எஸ். ஜா கொண்டு சென்றார்

மாஸ்கோ, ஜுலை 9

இந்திய வெளியுறவுக் காரியதரிசி திரு. சி. எஸ். ஜாவை, சோவியத் பிரதமர் திரு கொஸிஜின் மாஸ்கோவில் வரவேற்றார்.

திரு. சி.எஸ்.ஜா, பிரதமர் இந்திராகாந்தியிடமிருந்து ஒரு செய்தியைப் பிரதமர் கொஸிஜினிடம் ஒப்படைத்தார்.

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நெருங்கிய உறவு இருந்துவருவதாகவும், அது மேலும் வளருமெனத்தாம் நம்புவதாகவும் ரஷ்யப் பிரதமர், திரு. ஜாவிடம் கூறினார்.

## பிரபல சினிமா நடிகை விவியன் லெய் காலமானார்

லண்டன், ஜுலை 9

இந்தியாவில் பிறந்த பிரபல ஹொலிவூட் நடிகையும், சேர் லோரன்ஸ் ஒலிவியரின் முன்னைய மனைவியுமாகிய விவியென்லெய் நேற்று லண்டனில் காலமானார். அவருக்கு வயது 54 ஆகும்.

இவர் சிறந்த நடிகைக்கான ஹொலிவூட் 'ஒஸ்கார்' பரிசை 'கோனவித் தி விண்ட்' படத்திற்காக 1939லும், 'ஏ ஸ்ரீட் கார் நேம்ட் டிசைர்' படத்திற்காக 1957லும் பெற்றார்.

## பத்திரிகையின் எச்சரிக்கை

ஜாகர்த்தா, ஜுலை 9

இந்தோனேஷியப் பத்திரிகையான 'ஜகார்த்தா டைம்ஸ்' சீனாவிடம் மிக அவதானமாக நடக்கும்படி எல்லா ஆசிய நாடுகளுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது. மற்றைய ஆசிய நாடுகளுக்கெல்லாம் சீனா ஆபத்தானவொரு நாடாக விளங்குவதாக அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# சோவியத்ரஷ்யாவின் விமான கண்காட்சி

## ஆறு வருடத்தில் முதலாவது இது

மாஸ்கோ, ஜுலை 9

மாஸ்கோவில் ரஷ்யாவின் விமானக்கண்காட்சி ஒன்று ஆரம்பமாகியது. ஆறு வருடத்தில் இதுதான் ரஷ்யாவின் முதல் விமானக் கண்காட்சியாகும்.

சூப்பர்சோனிக், ஜெட் விமானங்கள் இக்கண்காட்சியில் பங்குபற்றின.

ஒலியைப் போன்று இரண்டு மடங்கு வேகமுள்ள புதிய ஜெட் போர் விமானமொன்றும் இக்கண்காட்சியில் கலந்துகொண்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

ஆனால், அந்த விமானம் இதுதான் என்பதை இலக்கம் மூலமோ அல்லது வேறு அடையாளம் மூலமோ அடையாளங் காட்டவில்லை

## கொங்கோவில் கலகக்காரர் அடக்கப்பட்டதாக அறிவிப்பு

பிரசவில்' ஜுலை 9

கொங்கோவில் கொங்கோ அரசாங்கத் துருப்பினர் கிளர்ச்சிக்காரரை அடக்கிவிட்டதாகவும், அவர்களுடனான சண்டையில் முழு வெற்றி ஈட்டிவிட்டதாகவும் இங்கு அறிவிக்கப்பட்டது.

கிழக்குக்கொங்கோவினுள் கிஸாங்கனியை கொங்கோ துருப்புகள் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து மீட்டுள்ளன. அங்கு நடைபெற்ற சண்டையில், பல ஐரோப்பிய கூலிப்படையினர் கொல்லப்பட்டனர்.

# லடாக்கில் இந்திரா

## துருப்பினருக்கு பாராட்டு

லடாக், ஜுலை 9

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று லடாக் பகுதிக்கு விஜயம் செய்தார். புதுடில்லியிலிருந்து அவர் விமான மூலம் அங்கு சென்றார்.

லடாக் பகுதியில் நிறுவப்பட்டுள்ள ராணுவத்தினரை அவர் சந்தித்தார். ஸ்தல தளபதிகளுடன் அவர்பேச்சுவார்த்தை நடாத்தினார்.

**பாராட்டு**

துருப்புகளிடையே பேசுகையில் அதிகாரிகளுக்கும் ஜவான்களுக்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

நாட்டின் ஆதரவு அவர்களுக்கு எப்போதும் உண்டு என்று அவர் அவர்களிடம் மேலும் குறிப்பிட்டார்

நேற்று மாலை திருமதி இந்திராகாந்தி புதுடில்லி திரும்பினார்.

# நைஜீரியாவில் கடும் உள்நாட்டு போர்

லாகோஸ், ஜுலை 9

நைஜீரியாவில், சமஷ்டி நைஜீரியத் துருப்புகளுக்கும் பிரிந்து சென்ற கிழக்கு நைஜீரியத் துருப்புகளுக்குமிடையே சண்டை நடைபெறுகிறது. இரு தரப்பினரும் ஆரம்ப வெற்றிகள் தமக்கே என உரிமை பாராட்டியுள்ளன.

சண்டையைப் பற்றி முதலில் அறிவித்த கிழக்கு நைஜீரியா ரேடியோ, சமஷ்டித் துருப்புகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிவித்தது.

அண்மையில் சமஷ்டி நைஜீரியாவிலிருந்து தனியாகப் பிரிந்த கிழக்கு நைஜீரியா, 'பியாவ்ரா' என்ற பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டது.

சமஷ்டி நைஜீரியாவின் தலைநகரான லாகோஸிலிருந்து ஒலிபரப்பாகிய ரேடியோ, நேற்றிரவு தனது வழக்கமான செய்திகளை இடைமறித்து, சமஷ்டித் துருப்புகள் கிழக்கு நைஜீரியா மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தது.

**இரு நகரங்கள் பிடிக்கப்பட்டன**

ஒபுட்டு, ஓபோலா ஆகிய இரு கிழக்கு நைஜீரியா நகரங்களைக் கைப்பற்றியதாகவும் அறிவித்தது.

பிரிந்துசென்ற கிழக்கு நைஜீரியாவின் கவர்னரான கேர்ணல் ஒஜுவையும், புரட்சிப் படையினரையும் கைப்பற்றுமாறு சமஷ்டித் துருப்புகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

புரட்சிப்படைகள் சுட்டால் அவற்றுக்கெதிரான நடவடிக்கைகளில் இறங்குமாறு சமஷ்டி நைஜீரியாவின் முப்படைகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

**கடைசியாக வந்த செய்திகள்**

கடைசியாக எமக்குக் கிடைத்துள்ள செய்திகளின்படி, நைஜீரிய சமஷ்டித் துருப்புகள் கிழக்கு நைஜீரியாவுள் ஆழமாகப் பிரவேசித்து விட்டதாகத் தெரிகிறது.

சமஷ்டித் துருப்புகள் மூன்ருவது நகரொன்றைக் கைப்பற்றியதுடன், மேலும் 3 நகரங்களைச் சுற்றிவளைத்துள்ளதாகவும், மறுதரப்பினருக்கு அதிக சேதம் விளைத்ததாகவும் லாகோஸ் ரேடியோ தெரிவித்தது.

கிழக்கு நைஜீரியாவின் தலைநகரான எனுக்கிலிருந்து ஒலிபரப்பான ரேடியோச்செய்தி, சமஷ்டித் துருப்புகளின் முன்னேற்றம் தடுக்கப் பட்டுள்ளதாகவும், அவர்களில் 200 பேரைத் தமது துருப்புகள் கொன்றிருப்பதாகவும் அறிவித்துள்ளது. தமது தரப்பில் 4 பேர் கொல்லப்பட்டதாகவும் 18 பேருக்குக்காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அது மேலும் தெரிவித்தது.

# அமெரிக்க பி-52 விமானம் நொறுங்கியது

## தென் வியட்னமில் சம்பவம்

சைகோன், ஜுலை 9

அமெரிக்க பி—52 ஜெட் போர் விமானமொன்று, தென்வியட்னமில் ஓரிடத்தில் விழுந்து நொறுங்கியது. விழுந்ததன் விளைவாக உடன் தீப்பற்றிக்கொண்ட விமானத்திலிருந்த சிப்பந்திகளில், ஒருவரைத் தவிர, எல்லோரும் இறந்தனர்.

இவ் விமானம், வடவியட்னமியர் மீதான குண்டுத் தாக்குதலொன்றின் பின், தென்வியட்னம் திரும்பி வநதுகொண்டிருந்தது.

## நக்ஸல்பாரியில் கடமையாற்றும் பொலீசாருக்கு அதிக அதிகாரங்கள்

### மே. வங்காள முதல் மந்திரி திரு. அஜோய் அறிவிப்பு

கல்கத்தா, ஜுலை 9

நக்ஸல்பாரியிலுள்ள பொலிஸாருக்கு அதிக அதிகாரங்கள்வழங்கப்பட்டுள்ளதாக மேற்கு வங்காள முதல் மந்திரி திரு. அஜோய் முக்கர்ஜி தெரிவித்தார்.

தீவிரவாதிகளுக்கெதிராகத் தமக்கு உசிதமாகத் தோன்றும் நடவடிக்கைகளைப் பொலிஸார் எடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவசியமெனில், அவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்திலும் ஈடுபடலாம்.

குழுத்தலைவர்களைக் கைது செய்யவும், மறைவிடங்களைச்சூழ்ந்து தேடிப்பார்க்கவும் பொலிஸாருக்கு அதிகாரமுண்டு.

நேற்று வெளியான அறிக்கையொன்றில், மேற்கு வங்காள முதல் மந்திரி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**வெறும் கனவு**

இந்தியாவிலுள்ள பீகிங் சார்பு கம்யூனிஸ்டுகள் சில இந்நாட்டிலேயே ஒரு சுதந்திரப் பிரதேசத்தைப் பிரகடனப்படுத்தும் துரோகச் செயலில் ஈடுபடுவதாக

(4-ம் பக்கம் பார்க்க)

# பர்மியர் - சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் சீனர்

## ஆயிரக்கணக்கில் கலந்தனர்

ரங்கூன், ஜுலை 9

நேற்று இங்கு நடைபெற்ற சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கான சீனர்களும் கலந்துகொண்டனர்.

பர்மாவுக்கெதிரான பீகிங் ரேடியோ ஒலிபரப்புகளை ஆட்சேபித்து நேற்றும் பர்மாவில் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நாள் முழுவதும் தொடர்ந்து நடைபெற்றன.

இந்தச் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் சீனர்களும் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர்.

'அவர்கள் பீகிங் ரேடியோ ஒலிபரப்புகளைக் கண்டித்துக் கோஷம் கிளப்பினர். வெளிநாட்டுச் சீனர்களுக்கும் பர்மிய மக்களுக்கு மிடையே மனக்கசப்பை உண்டாக்குவதாக அவற்றை அவர்கள் கண்டித்தனர். அதே நேரத்தில் அச் சீனர்கள் 'நீவின வாழ்க!' என்று கோஷமிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே நாவுக்கரசர் சிரமதானம் செய்தார்"

— கி. வா.ஜ.

வெள்ளவத்தை, ஞாயிறு

"பகுத்தறிவுவாதம், சுயமரியாதை இயக்கம் என்று கூறிக்கொண்டு இக்கால இளைஞர்கள் பலர் கடவுள் நம்பிக்கையற்றவர்களாகவும் பக்தி மார்க்கங்களை உதாசீனம் செய்பவர்களாகவும் இருந்துவருகிறார்கள். அன்புவழிதான் உலகை உய்விக்கச்சிறந்த வழி என்பதை இவர்கள் உணரமுடியாமல் இருக்கிறார்கள். உள்ளார்த்தமான அன்பு என்பது வெளியே எடுத்துக்காட்டக்கூடியது அல்ல அது நாமாகவே உணரவேண்டியது" என தென்னகத்திலிருந்து வந்த கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் "நால்வர் அறம்" பற்றிப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "இக்காலத்தில் அரசியல்வாதிகள் முதல் மாணவர்கள் வரையில் சிரமதான இயங்கங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே சைவமும், தமிழும் வளர்த்த திருநாவுக்கரசு நாயனார் கோவில்களிலே உழவாரத்திருப்பணிசெய்து சிரமதானமுறையை ஆரம்பித்துவைத்தார். எனவே சிரமதான முறையும், தொண்டர் இயக்கங்களும் சைவசமயத்துக்கும் தமிழ் மக்களுக்கும் புதியனவல்ல.

புராணக்கதைகளைக் கட்டுக் கதைகள் புளுகுகள் என்கிறார்கள். புராணங்களில் பொதுமக்களின் விளக்கத்திற்காகச் சில கதைகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் அவற்றைக் கருத்தற்ற குப்பைகள என்று ஒதுக்கிவிடமுடியாது. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சப்பந்தர் ஆகிய நால்வரும் செய்த அறங்கள், பாடிய தீந்தமிழ் தமிழ் இலக்கியங்கள் என்றும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் சைவசமயத்திற்கும் பெருமைதேடித்தரவல்லன.

வருங்கால இளைஞர்கள் விளக்கமில்லாத ஆதமீகத் தன்மையற்ற சமய எதிர்ப்புக்கொள்கைகளை விடுத்து நல்ல அறிஞர்களாகவும், அறம்மிக்க பக்திமான்களாகவும் வரவேண்டும்.

## பாண்கிணற்றில் சைக்கிள் பாகங்கள்

குரும்பசிட்டி, ஞாயிறு

களவு போன சைக்கிளைத் தேடுவதில் ஈடுபட்ட பொலிஸாரிடம் பாண் கிணற்றுக்குள் இருந்து சைக்கிள் உதிரிப் பாகங்கள் பல சிக்கிக் கொண்டன. குப்பிளானைச் சேர்ந்த வீ. சின்னையா என்பவர் தமது புதிய சைச்கிள் வீட்டிலிருந்து திருட்டுப் போய் விட்டதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்திருந்தார் பொலிஸார் எடுத்துக் கொண்ட தேடுதல் முயற்சியின் போது குரும்பசிட்டிக் கிராமத்தில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றினுள்ளே வேறு பல சைக்கிள்களின் உதிரிப் பாகங்கள் பழுதடைந்த நிலையில் கிடக்கக் கண்டு பிடித்துள்ளனர். இவற்றைப் பொலிஸ் நிலையம் மீட்டுச் சென்றுள்ள பொலிஸார் மேலும் விசாரணை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

## கிராமக்கோர்ட் நீதவான்

சங்கானை, ஞாயிறு

வலிகாமம் மேற்குப் பகுதிக்குப் புதிய கிராமக் கோர்ட் நீதவானாக திரு. எஸ். இராசநாதன் இம்மாதம் 2-ம் திகதி தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார்.

## இது யாருடைய திறப்புக் கோர்வை?

உரும்பராய், ஞாயிறு

இரு பெரிய திறப்புகளும், இரு சிறிய சாவிகளும்பொருந்திய சங்கிலிக் கோர்வை ஒன்று, அடைப்புப்பையுடன் உரும்பராயில் கண்டெடுக்கபட்டுள்ளது

உரும்பராய் வடக்கிலுள்ள காந்திசேவா நூல்நிலையத்துக்கெதிராக, யாழ்ப்பாணம்—பலாலி றோட்டில், நூல்நிலைய பொறுப்பாளர் திரு. கா. செல்லையாவினால் கண்டெடுக்கப்பட்ட இத்திறப்புக் கோர்வை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர், தக்க அத்தாட்சிகளுடன், இத்திறப்புக் கோர்வையை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## களவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது நேற்றுமுன்தினமிரவு இப்பகுதிகளிலுள்ள பல வீடுகளுக்குள்ளும் நுழைந்ததிருடர்கள் இறுதியாக பாலசுப்பிரமணியம் செட்டியாரின் மனைவியினுடைய 500 ரூபா பெறுமதியான தாலியோடு கூடிய சங்கிலியையும் இன்னொரு வீட்டில் 1000 ரூபாவையும் திருடிச் சென்றார்களாம். இதுசம்பந்தமாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## தேர்த்திருவிழா

சங்கானை, ஞாயிறு

சித்தன்கேணி சிதம்பரேஸ்வர ஆலயத்தேர்த் திருவிழா இம்மாதம் 12-ம் திகதி புதன்கிழமை நடைபெறும். 13-ம் திகதி தீர்த்தத்திருவிழாவாகும்.

## நக்ஸல்பாரியில் . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

முதல் மந்திரி கூற்றஞ்சாட்டினார். 'இது அக்குழுவினரின் வெறும் கனவேயாகும்' என்றார் திரு. அஜோய் முக்கர்ஜி.

நக்ஸல்பாரிக்கு ஏற்கனவே ஆயிரத்துக்கு மதிகமான ஆயுதந்தாங்கிய பொலிசார் சென்றுளளனர்.'

### சவானுடன் சந்திப்பு

திரு அஜோய் முக்கர்ஜி, நேற்றுப் புதுடில்லியில் மத்திய உள்துறை மந்திரி திரு. சவானைச் சந்தித்து, நக்ஸல் பாரி நிலைமை பற்றி ஆலோசித்தார். இச்சந்திப்பு 1மணி நேரம் நீடித்தது.

## "பெற்றோரை எதிர்க்கும் பிள்ளைகள்: வளர்ப்பு முறையே காரணம்"

### இந்து சன்மார்க்க ஆண்டுவிழாவில் பேச்சு

வெள்ளவத்தை, ஞாயிறு

"சைவசமயம் பல சமயங்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய மெய்ச்சமயம். அதன் பெருமை அளப்பரியது. இக்காலத்தில் சமுதாயப் பிரச்னைகளும் நாட்டு அரசியற் பிரச்னைகளும் தலையெடுத்துள்ள சூழ்நிலையில் தமது சொந்தப் பிரச்னைகள் உட்படப் பொருளாதாரப் பிரச்னைகளும் மலிந்த மக்களுக்குத் தம்மைப் படைத்தவன் என்று சொல்லப்படும் கடவுள்மீதும் அவரைப் போற்றும் சமயத்தின்மீதும் ஓரளவு வெறுப்புத் தோன்றுவது இயற்கையே. ஆனால் இந்த வெறுப்பு நிரந்தரமானதல்ல. வெகுவிரைவில் மனமாற்றம் ஏற்பட்டு மீண்டும் அவர்கள் சைவத்தின் அன்பு நெறிக்குள் வந்துவிடுவார்கள்."

இவ்வாறு உணுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கத்தின் பத்தொன்பதாவது ஆண்டுவிழாவில் உரையாற்றிய கொழும்பு பிரதம தபாற்கந்தோரைச் சேர்ந்த திரு. கோ. பாக்கியராசா கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'இக்காலத்தில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு மத அனுட்டானங்களையும், கொள்கைகளையும் பக்தி வழியையும் போதிப்பதில்லை. அவர்களைத் தமது போக்கிலேயே வளர விடுகிறார்கள். இதனால் காலகதியில் பிள்ளைகள் தமக்கென்று ஒவ்வொரு கொள்கைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு பெற்றோர்களையும்எதிர்க்கத் தொடங்கிவிடுகிறார்கள் எனவே சைவப் பெற்றோர்கள் இனிமேலாவது தமது பிள்ளைகளின் சமய ஒழுக்கத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். இக்காலத்தில் திருநீறு பூசும் சைவ இளைஞர்களைக் காண்பது மிகவும் அரிதாக'இருக்கிறது' என்றார்

முன்னாள் உயர் நீதிமன்ற அரசரும் இந்துமாமன்றத் தலைவருமான சைவசிகாமணி திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவாளர்கள் சி. திருநாவுக்கரசு, கே. கிருஷ்ண பிள்ளை ஆகியோருட்படப் பலர் பேசினர்.

திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராசா தேவாரப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். இன்னிசைக் கச்சேரியும் நடனநிகழ்ச்சியும் நடைபெற்றன.

THE JAFFNA ACADEMY
&
SCHOOL OF TECHNOLOGY

CHUNDIKULI

Term closes for holidays on 4-th August, 1967 and reopens on 28th August, 1967

There will be special classes for The Advanced Level and University Entrance and Ordinary Level (December) Examinations in both English and Tamil media.

Classes in Electrical Engineering practice and Survey Draftsmanship and Building Construction are conducted by well qualified and experienced instructors.

Applications for new admissions must be made before 15th August, 1967

Director.

சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

சென்று திரும்பும் விமான டிக்கட்டுகளைப் பரிசாகப் பெறுங்கள். [அல்லது அதன் பெறுமதியான பணம்]

அத்துடன் 10 ஆறுதல் பரிசுகள்

முழு விபரங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டிருப்பதை வாசித்து தங்களுடைய பிரவேசங்களை இன்றே அனுப்பிவையுங்கள்.

சாளி! நான் கேட்டது இதுவல்ல!
ஜின் என்று சொல்லும் போது நான் கேட்பது—



மெஸ்தியா ஜின்னையே

ஏனென்றால் . . . . . . ? ?

1. புதிய மெஸ்தியா ஜின் இரு முறை வடிக்கப்பட்டது.
2. புதிய மெஸ்தியா ஜின் வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. புதிய மெஸ்தியா ஜின் மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. புதிய மெஸ்தியா ஜின்கள் [கலப்பற்றதும், தோடம் பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. புதிய மெஸ்தியா ஜின்தான் 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. புதிய மெஸ்தியா ஜின் றொம்ப றொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால்தான், மேனை சாளி, நான் ஜின் என்று சொல்லும் போது:

புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயேரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியர் ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதைஎழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன் புதிய மெஸ்தியா போட்டி மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட்' 3-வது மாடி, மாக்கான்மரைக்காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதியமெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப் படவேண்டும். பன்னிரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். முதலாவது பரிசு சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான சீட்டுகள் அனுப்புபவருக்கு சென்னைக்குப் போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டி முடிவு திகதி ஜூலை 31, 1967.

நான் மெஸ்தியா ஜின்னை விரும்புவதற்கு காரணம் ..........

பெயர்: ..........

விலாசம்: ..........

நான் இத்துடன் .......... கூப்பனும்/கூப்பன்களும் .......... லேபலும்/லேபல்களும் இணைத்துள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம


### நகை ஏலவிற்பனை

மன்னூர்

மன்னூர் மெயின் ரோட்டில் அடைவுபிடிக்கும் வீ,க. முருகேசு அன் கோ.விடம் 31-3-1966-க்கு முன் அடைவுவைத்து, மீட்காத நகைகளை 1967-ம் ஆண்டு ஆடி மாதம் 23-ம் திகதி [23-7-67] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி கம்பனியிலிருந்து பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

S. இரத்தினசபாபதி
2389 ஏலதார்.


### பட்டினசபை சமாஜங்கள் ஆகஸ்டில் கூடும

குரும்பசிட்டி, ஞாயிறு

அகில இலங்கை பட்டின சபைகளின் சமாஜ வருடாந்த ஆண்டுப் பொதுக் கூட்டம் ஆகஸ்ட் மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் காங்கேசன்துறைப் பட்டினசபை மண்டபத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்துகம எம். பி. திரு. ரி. தயாபஸ்குவால் இம் மகாநாட்டுக்குத் தலைமைதாங்குவார். உள்ளூராட்சி மந்திரி செனட்டர் எம். திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். தென்னிலங்கையிலிருந்துபட்டினசபைத் தலைவர்கள் பலரும் இவ் விழாவில் பங்குபற்றுவர்.

### பயிற்சியும இடமாற்றமும

பொல்காவலை, ஞாயிறு

பொல்காவலை தபாற்கந்தோரிலிருந்து சிவஞான சுந்தரம் ஒபசந்த, குமாரபேலி, குணதிலகஎன்போர் கொள்ளுப்பிட்டி தபால் தந்தி பயிற்சி நிலையத்துக்கு பயிற்சிக்காகவும், ஜெயரத்தின என்பவர்இப்பாகமுலதபாற்கந்தோருக்கும் இம்மாதம் 1ம்திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.


### தாமோதரம்பிள்ளை வைத்தியசாலை

[ஆவரங்காலில்] சின்னத்தம்பி தமோதரம்பிள்ளை வாதரோக வைத்திய நிபுணரால் வைத்தியமும் வைத்திய சிகிச்சை விடுதிச்சாலையும் நடாத்தப்பெற்று வந்தது சகலர்க்கும் தெரிந்ததே. அவ்வைத்தியசாலை அவரின் பின் அவரின் சிரேஸ்ட்ட புதல்வன் தா. செல்வத்துரை வைத்தியரால் நடாத்தப்பெற்று வந்ததும் தெரிந்ததே. அவரின்பின் குறித்த செல்வத்துரை வைத்தியரின் ஒரேஒரு புதல்வனுல் அவ்வைத்தியசாலை இயங்கிவருவதும் தெரிந்ததே. குறித்த வைத்தியசாலை இன்றும் என்றும் செ. கணபதிப்பிள்ளை வைத்தியரால் இருந்த நிலையத்திலேயே இருந்து இயங்கிவருகின்றது என்பதை அறியத் தருகிறேன்.

பதிவுபெற்ற
வைத்திய நிபுணர்
த. செ. கணபதிப்பிள்ளை,
பதிவு இலக்கம் 2058
மாக்கற் மேற்கு ஒழுங்கை,
7 ஆவரங்கால்.


கதிர்காமத்துக்கு

### விசேஷ பஸ் சேவை இராது?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்திற்கு நேரடியாக விசேஷ பஸ்கள் இம்முறை சேவைக்கு விடப்படாதெனத் தெரியவருகிறது.

இதுவரை அதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை யென்றும், இந்த வருடம் கதிர்காமத்திற்கு விசேஷ பஸ்கள் போடுவார்களெனத்தான் கருதவில்லை யென்றும், யாழ்ப்பாணம், பஸ்நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். [நி]


கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ணு [திருமலை]
விஜிதா [ஹட்டன்]
மொனேர்ண் [பண்டாரவளை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ஜெய்சங்கர், ஜெயலலிதா
நாகேஷ், மனேகர்
மாதவி, சகஸ்ரநாமம்,
பண்டரிபாய், ராமதாஸ்
நடிக்கும்

நீ

இசை: விஸ்வநாதன் [ராமமூர்த்தி]


### சாம்பியன்கள்

குரும்பசிட்டி, ஞாயிறு

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டிகள் கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. ஏ. சிவகுரு தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நான்கு இல்லங்களுக்கிடையில் இடம பெற்ற போட்டிகளில் சாந்தி இல்லம் முதலிடத்தைப் பெற்றது. இரண்டாம், மூன்றும், நான்காம் ஸ்தானங்களை முறையே கீர்த்தி, சக்தி, ஜோதி இல்லங்கள் பெற்றுக் கொண்டன. வெற்றியீட்டிய வீரர்கள் திருமதி சிவகுருவிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இவ் விளையாட்டுப் போட்டியில் சாம்பியன் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் பின்வருமாறு:- மேற்பிரிவு [ஆண்] வி. தளையசிங்கம், [பெண்] ஆர். கலைமகள், மத்திய பிரிவு [ஆண்] எம். விஜயநாதன், [பெண்] ஜே. மீராதேவி, கீழ்ப்பிரிவு [ஆண்] எம். மகேஸ்வரராஜா, [பெண்] கே. கிருஷ்ணவேணி.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் திங்கள் 10-7-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 பாட்டு—லலிதா செல்வரத்தினம், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச்சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
தங்கத் தம்பி

நியூ காலிங்கஸ்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ். வி. ரங்கராவ்
நடித்த
மந்திரவாதி

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நடித்த
மாடப்புறு

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Debbie Reynolds &
Ricardo Montalban
in
THE SINGING NUN


## வரிவிளம்பரம


### தேவை

காஷியர்...

ஆனையிறவு உப்பளத்தில் இருக்கும் தேநீர்க்கடைக்கு ஒரு கேஷியரும் இரண்டு சமையல் காரரும், இரண்டு சேல்ஸ்மனும் தேவை.

கேஷியருக்கு 500 ரூபா பிணப்பணம் கட்டவேண்டும். விபரங்களுக்கு 11-7-67க்கு முன் தேசிய உப்புக் கூட்டுதாபன தொழிலாளர் சங்கக் காரியதரிசியுடன் தொடர்புகொள்ளவும். சங்கக் காரியதரிசி.

2402

பெண் அற்றெண்டன்ற் பெண் தாதி:

பருத்தித்துறையிலுள்ள வைத்தியசாலை ஒன்றிற்கு பெண் அற்றெண்டன்ற் அல்லது தாதி தேவை. ஆங்கில அறிவு உள்ளவராக இருக்க வேண்டும். நற்சாட்சிப்பத்திரங்களுடன், எதிர்பார்க்கும் சம்பளமும் குறித்து விளம்பர இல. 2404, 'ஈழநாடு' மே/பா த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

2404

### கல்வி

வகுப்புகள்:

தபாற் தந்தியாளர், மத்திய எழுதுவினைஞர் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, (Jaffna Tutorial College) கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், நெல்லியடி, கரவெட்டி. 2497


### தடை

குரும்பசிட்டி, ஞாயிறு

சீனு, கிழக்கு ஜெர்மனி போன்ற கம்யூனிஸ நாடுகளிலிருந்து சஞ்சிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் இலங்கை வருவதை சுங்க இலாகாவினர் தடை விதித்துள்ளனர். பாடசாலைகள், நூல் நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் தனிப்பட்ட பிரமுகர்கள் பலருக்கும் மாதம் தோறும் இலவசமாகப் பெருந்தொகைப் புத்தகங்கள் பார்சல் மூலம் கிடைத்து வருகின்றது. தேசிய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையின் மீது சுங்க இலாகாவினர் இத் தடை உத்தரவை விதித்துள்ளனர். இத் தடை உத்தரவை சம்பந்தப் பட்டோருக்கு கடித மூலம் சுங்க இலாகா அறிவித்துள்ளது

### குடியேற்றம்

மல்லாவி, ஞாயிறு

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள முறிகண்டிக் குளக் குடியேற்றத் திட்டத்தில் குடியேற்ற வாசிகள் குடியேறினர். தென்னியங்குளத்தின் கீழும் குடியேற்றத்திற்குக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. வவுனிக்குளம் 4, 5-ம் பகுதிகளிலும் தென்னியங் குளத்திலும் சென்ற வருடம் காணி பெற்றவர்களுக்கு வீட்டுக் காணிகள் வழங்கப்பட்டன.

### ஆங்கில ஆசிரியருக்கு பயிற்சி

புன்னாலைக்கட்டுவன். ஞாயிறு

அகில இலங்கைப் பாடசாலைகளிலும் கடமையாற்றும் ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான இரண்டாம் பிரிவுப் பயிற்சி அடுத்த மாதம் 3-ம் திகதியிலிருந்து 12-ம் திகதிவரை கம்பகா பண்டாரநாயக்க மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென்றும், இவர்களுக்கான போக்கு வரத்து, உணவு, விடுதி வசதிகள் அரசாங்கத்தால் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில பாடத்தின் தரத்தை உயர்த்துவதற்காகப் புதுப் போதனு முறைகளில் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுமெனத் தெரிகிறது.

### புதிய முத்திரைகள்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இலங்கைத் தேயிலையின் நூற்றுண்டு விழாவை முன்னிட்டு மேலும் நான்குபுதிய முத்திரைகள் பாவனைக்கு வரவிருக்கின்றன. தேயிலை பற்றிய காட்சிகளே இவற்றில் இடம்பெறுமாம் நான்கு சதம், நாற்பது சதம், ஐம்பது சதம், ஒரு ரூபாய் ஆகிய நான்கு இன முத்திரைகளுமே அவையாகும்.

### பெண்கள் சிரமதானம

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை சென். ஜேம்ஸ் தேவாலயத்தை நாற்பதிற்கும் அதிகமான பெண்கள் சேர்ந்து சிரமதான முறையில் கழுவிச் சுத்தம் செய்தனர். சுமார் 70 வருடங்களுக்குப்பின்னர் இப்போதுதான் தேவாலயம் கழுவிச் சுத்தம்செய்யப்பட்டது.

### ஆலய உற்சவம

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி வாரிநாதர் சிவன்கோவில் வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

## ஆயுர்வேத பரீட்சைமுடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை சுதேச வைத்தியசபையால்யாழ்ப்பாணம் இலங்கை ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் சென்ற ஏப்ரல் மாதம் நடைபெற்ற வருடாந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு:

நான்காம் வருடம்— டி. ஏ. எம். :— எஸ் திருநாவுக்கரசு- [2-ம் பிரிவு], வி. குலசேகரம் [2-ம்பிரிவு], இ. சந்திரோதயம் [2-ம் பிரிவு] எ. தேவநாயகி, எஸ். மிருத்தின்ஜெயம், ஏ. அரசக்கோன், ஆர். தில்லைநாதன், ஏ. அன்ரனி, கே. பாலசிங்கம்

மூன்றும் வருடம்— எஸ். பேரம்பலம் [2-ம் பிரிவு], வி. பேரின்பம், கே. வேலும்மயிலும், கே. குபேந்திரநாதன், எஸ். சிறீவிக்னேஸ்வரார், கே. சுப்பிரமணியம், கே. ஜெயரத்தினம்.

இரண்டாம் வருடம்— பி. ஐ. யோசெவ் [2-ம் பிரிவு], ஆர். சுசீலா [2-ம் பிரிவு], ரி. கமலாதேவி [2-ம் பிரிவு], கே. பாலசுப்ரமணியம் [2-ம் பிரிவு] ஜே. எம். பி. சந்திரோதயம், கே. செல்வபாரதி, ரி. நளாயினி, எம். நித்தியானந்ததேவி, ஏ. எம். செபஸ்தியாம்பிள்ளை, எம். எஸ். இரசூலா, ரி. கதிர்காமநாதன், ஆர். கனகரத்தினம், கே. ஜெயசுந்தரமூர்த்தி.

முதலாம் வருடம்— கே. பரமேஸ்வரி 2-ப் பிரிவு, ஏ. மேரிராணி, எம். விக்னேஸ்வரமூர்த்தி, ரி. ரி. தியானேஸ்வரன், என். சக்திவேல், கே. கனகம்மா, எஸ். பொன்னம்பலம், ரி. சரோஜினிதேவி, ரி. டி. மதுரநாயகம், எஸ். பரமசிவம்பிள்ளை, கே. கந்தசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வழக்கறிஞரை குறுக்குவிசாரணை செய்யவேண்டாம்'

## சாட்சிக்கு நீதிபதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

''மரணமான சாம்பசிவமூர்த்தி எனது சகோதரியின் மகன். சம்பவம் நடந்த அன்று நான் பஸ்நிலையத்தில் நின்றபோது யாரோ இருவர் சாம்பசிவம் குத்தப்பட்டுவிட்டதாகச் சொன்னதைக் கேட்டு, நான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது அங்கு சாம்பசிவமூர்த்தி இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.''

மேற்கண்டவாறு நேற்று நடைபெற்ற மண்டைதீவுக் கொலை வழக்கில் சாட்சியமளித்த சுப்பிரமணியம் குணரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஜனுப். எம். ஜமீல் முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கில் மண்டைதீவைச் சேர்ந்த சாம்பசிவமூர்த்தியைக் கொலைசெய்ததாக, குலசிங்கநாதன், சிவபாதசுந்தரம், பாலசிங்கம், திருநாவுக்கரசு ஆகிய நால்வர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. முதலாம், இரண்டாம் எதிரிகள் சார்பில் புரக்டர் அன்ரனி வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன் ஆகியோரும், மூன்றும் எதிரி சார்பில் வழக்கறிஞர் சுந்தரலிங்கமும், நாலாம் எதிரி சார்பில் புரக்டர் ஆர். விசுவநாதன், வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன் ஆகியோரும் ஆஜராகியிருந்தார்கள். பொலிஸ் தரப்பில் புரக்டர் எஸ். சி. கதிரவேலுவும், இன்ஸ்பெக்டர் மெண்டிஸும் வழக்கை நடத்தினார்கள்.

சாட்சியமளித்த குணரத்தினத்தை எதிரிகள் தரப்பு வழக்கறிஞரான கே. வி. எஸ். சண்முகநாதன் குறுக்குவிசாரணை செய்தபோது ஒரு சந்தர்ப்பத்தில் நீதிபதி சாட்சியைப் பார்த்து வழக்கறிஞர் கேட்கும் கேள்விகளுக்கு மாத்திரம் பதில் சொல்லும்படியும், வழக்கறிஞரைத் திருப்பிக் கேள்விகளைக் கேட்கவேண்டாமென்றும் எச்சரித்தார். பாலசிங்கம் என்பவரும் சாட்சியமளித்த பின்னர் மேல்விசாரணை இம்மாதம் 15ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. ந. நி.

# சென்னைக் குடிசை வாழ்மக்களுக்கு புதிய வீடமைப்புத் திட்டம்

## சர்வகட்சி முடிவென அண்ணு அறிவிப்பு

சென்னை, ஜூலை 8

சென்னையில் உள்ளகுடிசை வாழ் மக்களுக்குப் புதிதாகக் குடிசைகளைத் திருத்தியமைப்பதென, சென்னை தீ விபத்துகள் பற்றிய சர்வகட்சிக் கமிட்டி முடிவுசெய்துள்ளதாகத் தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை இன்று கீழ் சட்டசபையில் அறிவித்தார்.

சென்னையில் 9,000 தொடக்கம் 1 லட்சம் வரை குடிசைகள் இருப்பதாகவும், இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகளில் அவை திருத்தியமைக்கப்படும் என்றும் முதல் மந்திரி தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்படும் குடிசைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 400 தொடக்கம் ரூ. 450 வரை செலவாகும் என்றார் முதல் மந்திரி. மொத்தம் 3 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் முதல் கட்டமாக 1 கோடி ரூபாய் நிதி திரட்டத்தாம் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தீ விபத்து நடை பெற்ற இடங்களில் வருவோர் போவோரைப் பிடித்து அடிப்பதிலும், வதந்திகள் பரப்புவதிலும், குழப்பத்தை விளைவிப்பதிலும் ஈடுபடும் சமூக விரோதிகளை முதல் மந்திரி எச்சரித்தார்.

முதல் மந்திரியின் இப் பேச்சுக்குப்பின், எதிர்க்கட்சித்தலைவர் திரு. கருத்திருமன், தீ விபத்துகள் மீதான தமது ஒத்திவைப்புப் பிரேரணையை வற்புறுத்தவில்லை.

## சுதந்திரக்கட்சி மகாநாடு

காலி, சனி

சுதந்திரக்கட்சியின் 15வது வருடாந்த மகாநாடு காலியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சியின் காலிக் கிளை இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இம்மாதம் 20, 21ந் திகதிகளில் பூஸா குதிரைப்பந்தயத் திடலில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டுக்கு எதிர்க்கட்சித் தலைவரும், சுதந்திரக்கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமை தாங்குவார்.

சுதந்திரக்கட்சி வாலிப முன்னணியைச் சேர்ந்த சுமார் 5,000 பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் பங்கு பற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பப்படவிருக்கின்றது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ராதாகிருஷ்ணன் முத்திரை

புதுடில்லி, ஜூலை 8

முன்னைநாள் பாரத ஜனுதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனின் உருவப்படம் கொண்ட 15 பைசா முத்திரை, அவர் பிறந்த தினமான செப்டம்பர் 5ந் திகதியன்று வெளியிடப்படவிருக்கிறது.

## தீவுப்பகுதி நீர் தானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீவுப்பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் கஷ்டத்தை நீக்குவதற்கு முதல் நடவடிக்கையாக யாழ்ப்பாணம் சமூக சேவைப் பகுதியினர் சென்ற 20-ம் திகதி முதல் புங்குடுதீவுப்பகுதிக்குமோட்டார் லொறிகள் மூலம் பொதுமக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்துவருகிறார்கள்.

வெகுவிரைவில் இந்தக் குடிநீர் விநியோகம் எழுவைதீவு, காரைநகர் தோப்புக்காடு ஆகிய பகுதிகளுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## கிளிநொச்சிப் பகுதியில் தாச்சிப் போட்டி

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சிக் காரியாதிகாரிப் பிரிவில் கடமையாற்றும் உடற்பயிற்சிப் போதனையாளர் திரு. க. ஏகாம்பரம் அப்பகுதிப் பாடசாலைகளுக்கிடையிலும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலும் ஒரு தாச்சிப் போட்டி ஒன்றை நடத்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

சிரமதான மூலம்

## 25 ஏக்கரில் காடு அழித்தனர்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சி 7-ம் வாய்க்காலில் உள்ள ஆதாரக்கல்வி குருகுலத்துக்குச் சொந்தமான 25 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காடு சிரமதான இயக்கமூலம் அழிக்கப்பட்டது. இவ்வைபவத்தை கிளிநொச்சி முன்னைநாள் எம். பி. திரு. அ. சிவசுந்தரம், உயர்திருவடிவேல் சுவாமியின் சொற்பொழிவின் பின்னர் சமையாசாரப்படி ஆரம்பித்துவைத்தார்.

வைபவத்தில் குருகுல நிர்வாகிகளும் மாணவ மாணவிகளும், கிளிநொச்சி இந்து உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளும் பங்கெடுத்துக்கொண்டனர். பொது மக்களும் இதில் கலந்துகொண்டனர். இச்சிரமதான பணி தொடர்ந்து இருநாட்கள் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

கிளிநொச்சி, ஞாயிறு

கடந்த மூன்று வருடங்களாக கிளிநொச்சி மக்கள் வங்கியில் உதவி முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. எஸ். கனகசபாபதி அடுத்தமாதம் தொடக்கம் முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று சம்மாந்துறை மக்கள் வங்கிக்கு மாறிச் செல்லவிருக்கிறார்.

யாழ்ப்பாணம், திங்.

உருளைக் கிழங்கைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடுதலாக விற்பனை செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள கடையொன்றின் சொந்தக்காரரான கே. அன்னலிங்கம் என்பவரை 25 ரூபா அபராதம் செலுத்துமாறு மாஜிஸ்ட்ரேட் திரு. எம். ஜமீல் உத்தரவிட்டார். [ந. நி.]

# எதிரிக்கு ரூ. 250 அபராதம்

## வியாபாரி மீதான குற்றச்சாட்டு ஊர்ஜிதம்

காங்கேசன்துறை, ஞாயிறு

117 இருத்தல் மல்லி, 112 இருத்தல் மிளகாய். இரண்டுமூடை மா ஆகியவற்றை வைத்துக்கொண்டு விற்க மறுத்ததாக சங்கானையைச் சேர்ந்த வி. இராஜகுலசிங்கம் என்ற வியாபாரி மீது சங்கானை பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

மல்லாகம் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்ட இவ் வழக்கில் நீதிபதி திரு. டி. எஸ் நிற்சிங்கா எதிரிக்கு 250 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். எதிரி தரப்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜராகியிருந்தார்.

# சூயஸ் கால்வாய் பகுதியில் மோதல் தொடர்கிறது

## இஸ்ரேலிய டாங்கி கவச வண்டிகள் நாசம்

கெய்ரோ, ஜூலை 8

**சூயஸ்கால்வாய்க்குக் கிழக்குக் கரையில் ஐக்கிய அரபுக்குடியரசுத் துருப்புகளுக்கும், இஸ்ரேலியத் துருப்புகளுக்குமிடையில் கடும் சண்டை நடப்பதாக அறிவிக்கப்பட்டது.**

செயித்துறைமுகத்துக்கு எதிராகவுள்ள புவாட் துறைமுகத்தில் இஸ்ரேலிய விமானங்கள் குண்டு வீசியதாக கெய்ரோ வானொலி அறிவித்தது.

ஐக்கிய அரபுக் குடியரசு வானப்பிராந்தியத்தை மீறி சூயஸ்கால்வாய்க்குக் கிழக்குக் கரையில் இஸ்ரேலிய துருப்புகள் ஐக்கிய அரபுக் குடியரசைத் தாக்கி முன்னேற முயன்றபோது ஐக்கிய அரபுக் குடியரசுப் படையினர் வழிமறித்துவிட்டதாகவும் கெய்ரோவிலிருந்து கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது.

ஐக்கிய அரபுக் குடியரசு பீரங்கிகளால் சுட்டபோது இஸ்ரேலிய டாங்கி ஒன்றும், 3 கவசவண்டிகளும் நாசமாக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இரண்டரை மணி நேரம்வரை நடைபெற்ற குண்டுவீச்சில் இரு இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர். 13 பேர் காயமுற்றனர்.

இன்று மாலை [இலங்கை நேரப்படி] 5 மணிக்கு சூயஸ் கால்வாயிலுள்ள கிழக்குப் பகுதியிலுள்ள வானப் பிராந்தியத்தில் இஸ்ரேலிய விமானங்கள் குண்டு மாரி பொழிந்துகொண்டிருப்பதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

## ரஷ்ய பத்திரிகை அறிவிப்பு

மாஸ்கோ, ஜூலை 8

ரஷ்யா ஐக்கிய அரபுக் குடியரசுக்கு ஆயுதங்களை அனுப்பத் தொடங்கிவிட்டதாக இன்று சோவியத் சஞ்சிகையொன்று பகிரங்கமாக செய்தி வெளியிட்டுள்ளது.

## 'சவுதி அரேபியா எண்ணை அனுப்பும்'

கெய்ரோ, ஜூலை 8

சவுதி அரேபியா பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் எண்ணை அனுப்ப முடிவு செய்துள்ளதாக கெய்ரோ செய்தியொன்று அறிவித்துள்ளது. அராபிய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கு மிடையே நடைபெற்ற போரில் இந்த இரு நாடுகளும் தலையிடவில்லையென அது இந்த முடிவுக்குக் காரணம் காட்டியுள்ளதாகவும் இச்செய்தி விபரித்துள்ளது.

## கந்தரோடையில் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நூதனசாலையிலுள்ள ஒரு சிலாசனத்தை கமிஷனர் படித்து அது 9-ம் நூற்றாண்டுக்குரியதெனக் கூறி, அதைப்பற்றி ஆராயபுகைப் படமெடுத்துச் சென்றார்.

## 20 வருடமாகியும் தற்காலிகம்

யாழ்ப்பாணம், திங்கள்

20 வருடங்களாகப் பணியாற்றியவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமலிருக்கின்றனர் சிறைச்சாலைவழிப் பாதுகாவலராகக் கடமையாற்றும் 31 பேர்களே இவர்களாவர்.

இவ்விஷயத்தை பல தடவை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது. [நி]

## காடைக்குஞ்சுகள் கோழிபொரித்தது

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலையைச் சேர்ந்த மாட்டின் பிலிப் என்பவர் காடைப் பறவையின் முட்டைகளை கோழிக்கு அடைவைத்தார். காடைக் குஞ்சுகள் பொரித்து தற்போது கோழியுடன் உணவுதேடுகின்றன. கோழிமுட்டை பொரிப்பதற்கு 21 நாட்கள் எடுக்கின்றன அதேபோல் காடைப் பறவையின் முட்டையும் 21 நாட்களின் பின்பே பொரித்தன. பாடசாலைப் பிள்ளைகளும் மற்றோரும் இதனை விநோதமாகப் பார்க்கின்றனர்.

## கன்னியாஸ்திரீக்கு கௌரவம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டாரவளை லூர்துநாயகி மடத்தில் இருக்கும் சங். மரியா விஜிலா என்னும் கன்னியாஸ்திரியின் 60 வருட சேவையைப் பாராட்டி அவரது 60 வருட ஜூபிலியின்போது நெதர்லாந்து தேச அரசி ஜூலியாஞ அந்நாட்டு இலங்கை ஸ்தானிகர் மூலம் சிறந்த பட்டம் அளித்து அதன் அடையாளமாய் ஒரு தங்கப் பதக்கமும் அனுப்பியுள்ளார். இக்கன்னியாஸ்திரீ தமது சேவையில் பெரும்பகுதியை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஆற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பகுதிக்கு சுமார் 25 தமிழ் தெரிந்த பொலிஸார் எதிர்வரும்செப்டம்பர் மாதத்தில் புதிதாக நியமிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகின்றது. அண்மையில் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org